மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண் 212/2023-ல்**

**அசல் வழக்கு எண். 91/2020**

V. கணேசன் ...மனுதாரர் /வாதி

**// எதிர்//**

1. முருகானந்தம்

2.முத்துகுமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. ஜீவானந்தம் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ராதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று (15.12.2023)இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 14-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது வாதியால், பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுச்சொத்து தஞ்சாவூர் அரண்மனை நிர்வாகத்துக்கு சொந்தமானது ஆகும். மனுதாரர் கடந்த 14.03.1988 ம் தேதியில் தஞ்சாவூர் அரண்மனையின் பரம்பரை டிரஸ்டியும், அபிஸியல் ரிஸிவருமான துளசேந்திர ராஜா சாகிப் அவர்களுக்கு ஒரு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்ட குத்தகைப்

பத்திரத்தின்அடிப்படையில் மனுச்சொத்தை குத்தகைதாரராக ஒப்புக்கொண்டு நாளது தேதி வரையில் புஞ்சை சாகுபடி செய்து அனுபவித்து வருவதால் சட்டப்படியான குத்தகை அனுபவதாரர் ஆவார். மனுச்சொத்துக்கு அவ்வப்போது வருடாந்திர குத்தகையை செலுத்தி வருகிறார். அதன்படி 2020 வரையில் குத்தகையை செலுத்தி இருக்கிறார். மனு சொத்தில் உள்ள குத்தகை பாக்கிகாக வேண்டி மன்னார்குடி வருவாய் நீதிமன்றத்தில் P.T.No.15/1993 என்று மனுதாரர் மீது வழக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, சட்டப்படி செலுத்திவைக்க வேண்டிய குத்தகை பாக்கியையும் செலுத்தி இருக்கிறார்.

தாவா சொத்துக்கு மனுதாரரால் குத்தகை செலுத்தியதற்கான ரசீதுகள் மற்றும் தஞ்சாவூர் அரண்மனை கோட்டூர் தோட்டம் நிர்வாகியால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட குத்தகை செலுத்துவது தொடர்பான அறிவிப்பு அஞ்சல் அட்டை உள்ளிட்ட சில ஆவணங்கள் தற்போதுதான் கிடைத்துள்ளது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்பதால் மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்று மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

இம்மனுவின் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்ககடமைப்பட்டுள்ளார். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் யாவும் வழக்கிற்கு பின்பு யோசித்து வழக்கின் தோதிற்காக உற்பத்தி செய்யப்பட்டது ஆகும். ஆகவே, மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இரு தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது, பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு இருதரப்பு வாதம் முடிக்கப்பட்டு வாதிதரப்பு கூடுதல் விசாரணைக்காக போடப்பட்டிருந்தபோது இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவினைப் பொறுத்து எதிர்மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை. மேலும், ஆவணங்களின் தன்மை குறித்தும், அந்த ஆவணங்களைப்பொறுத்து குறுக்கு விசாரணை செய்வதற்கு எதிர்மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. எனவே, நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 15.12.2023) அவையறியப் பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.(முகூபொ),

<u>**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-**</u>

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.(முகூபொ),